www.padippakam.com

# ஈழ விடுதலை

# EALA VIDUTHALAI

பொங்கு தமிழர்க்கு
இன்னல் விளைந்தால்
சங்காரம் நிஜமென்ற
சங்கே முழங்கு
— பாரதிதாசன்

மலர் : 1 இதழ்: 7/8

மாசி, பங்குனி. 1976 விலை 15p

# தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்டு போராட....

பழைய நிலப் பிரபுத்துவத்திற்கோ, இன்று ஏழையின் இரத்தத்திலும் வியர்வையிலும் விலாப்புடைக்க உண்டு கொழுத்து, உப்பரிகையில்—உல்லாசபுரிகளில் கொஞ்சிவிளையாடும் நிலப் பிரபுக்களுக்கோ, அன்றேல் குட்டி முதலாளிகளுக்கோ பாதுகாப்புக் கொடுப்பதற்காக சாமானியர்களிடம் பரப்பப்பட்டுள்ள சுதந்திரப் போராட்டத் தீ அல்ல, ஈழத்தின் உரிமைக்குரல். வெளிநாட்டு முதலாளிகளின் பணத்தை நம்பி, வெளிநாட்டு வங்கிகளுக்கு வட்டிப்பணம் உழைப்பதற்காகவும், பிற நாட்டவரிடம் அரசியல் அதிகாரத்தை பறிகொடுத்துவிட்டுப் பண வருமானத்தால் திருப்தி காண்பதற்காகவும் தூண்டிவிடப்பட்டுள்ள சில்லறைப் பேர்வழிகளின் அரைகுறைக் கூத்தல்ல, இவ் விடுதலைப் போர்.

சிங்கள ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுபட்டு, குடும்ப அதிகாரப் பிடிகளில் இருந்து பறித்தெடுத்து, ஆங்கிலம் படித்த அரைகுறைச் சமூகவாதிகளின் அரசியல் வாழ்விற்கு சமாதியிட்டு, அன்னிய அதிகாரவர்க்கத்தின் பிடியை ஒட்டநறுக்கி, நம் சமூகத்தின் பிற்போக்குச் சுயநலக் கும்பல்களின் வாழ்விற்கு முடிவுகட்டி, தன்மானம் காக்க முன்வந்துள்ள மானிடப் பிறவிகளான தமிழர்கள்—சுதந்திரத்துடன் தம் வாழ்வை பாதுகாக்கவும்— பக்குவப்படுத்தவும், இறுக்கமான சோசலிசப் புரட்சியுணர்வு அணையாது கட்டிக் காக்கின்ற, இலட்சியவெறி நிரம்பிய ஒரு சமுதாயத்தை அமைக்கத் திடமான தீர்மானத்துடன் எடுத்துவருகின்ற நடவடிக்கைகளே இச் சுதந்திரப் போரின் அடிப்படையாகும். தனிமனித சுதந்திரமும், பொருளாதார சுதந்திரமும் பறிக்கப்பட்ட சாமானியர்களே இதை நடத்த முன்வந்துள்ளவர்கள். அவர்களே இதை வெற்றியுடன் நிறைவேற்றி வைக்கக் கூடியவர்கள்; அவர்களே இப் பிரச்சனையின் வடிவத்தைச் சரிவர உணர்ந்துள்ளவர்கள். அவர்களின் ஈவிரக்கமற்ற விடுதலைக் குமுறல்களும், நடவடிக்கைகளுமே சரியான சுதந்திரத்தை நிலைநாட்டும்.

கூலிப்படைகளால் போராட்டம் நடாத்தப்பட்டு எந்த நாட்டிற்கும் விடுதலை கிட்டவில்லை. நாட்டைக் கட்டிவளர்க்க, ஊனும், உதிரமும் சிந்தி உழைக்க் மனமில்லாத எவனும் விடுதலைக்குத்தன்னை முழுதாக அர்ப்பணித்ததாகவுமில்லை. அவனால் விடுதலைப்பணி ஒரு அலகு அசைந்ததாயுமில்லை.

ஒரு சிறுவை புரட்சியில் உருவாக்கி, அப் புரட்சி உணர்வால், புரட்சிகரமான தோழமையால், புரட்சிவெறி கொண்ட உழைப்பால், புரட்சிமனம் கொண்ட பாட்டாளி மக்களின் சமதர்ம தத்துவப் பிடிப்பால், ஒரு வல்லரசு விவசாய மக்களைக் கொண்ட, விவசாய நாட்டில் உருவாக்கப்பட்டது, ஈழத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு; மறுதலிக்க முடியாத மாபெரும் படிப்பினை.

சார் அரசைத் தரைமட்டமாக்கி, சமதர்மத்தை இறுகப்பற்றியபடி, பனிபடரும் வனாந்தரமொன்றில் ரஷ்யா நாடு, உலகத்தின் பலமிக்க வல்லரசாகக் கட்டியெழுப்பப் படுகிறது. மக்களின் தொலைநோக்குமிக்க இலட்சியப் பிடிப்பால், சோர்வுறு உழைப்பால், போர்முனையில் தியாக தளிம்பு பெற்றவர்களின் தளரா முயற்சியால் — அமரிக்க ஏகாதிபத்தியத்துக்கும், இராணுவ பலத்துக்கும் திடமான கொள்கைப் பிடிப்பாலும், தீவிரமான—தொடர்ச்சியான—சோர்வடையாத தாக்குதல்களாலும் முகத்தில் அறைந்த வியட்நாமும், விடுதலை கிடைத்த உடனேயே நகரத்து மக்களை விவசாய நிலங்களை நோக்கி கிராமங்களுக்கு அழைத்துச் சென்று உணவு உற்பத்தியில் வெற்றிகண்ட கம்போடியாவும், அமரிக்க வல்லரசின் போர்க்குமுறலுக்குத் தலைவணங்காது—சோசலிசப் போராட்டங்களுக்குக் கைகொடுத்துவரும் சிறிய தீவான கியூபாவும் ஈழத்தின் சுதந்திர குமுறலுக்குப் பலமான படிப்பினைகள்,

அனல் இவைகளில் எந்த நாடும் எல்லோரையும் சமமாக நடத்துகின்ற அரசியற்கொள்கை அடிப்படையில்லாமல், எல்லா மனிதர்களும் மனிதர்களே; ஏற்ற இறக்கமில்லை எதிலும்—எவரிடமும்—; எல்லோரும் நாட்டில் உள்ளதைச் சமமாகப் பகிர்ந்து வாழ்வோம்; உழைப்பால் உள்ளவற்றை அதிகரிப்போம்; தேவைக்குப் போதுமானது கிடைக்கும்வரை ஓயாது பாடுபடுவோம் என்ற உணர்வு ஒவ்வொருவரிடமும் கொழுந்துவிட்டு எரியாமல் நாம் இன்று வியக்கின்ற நிலையை அடையவில்லை.

பிழைவிடுபவன் இருப்பான்; அவனைத் தட்டிக் கேட்பதற்கு ஒரு எதிர்க்கட்சி வேண்டும்; போட்டிமனப்பான்மை எமது பிறவிக்கொடை; அதற்கென ஒரு தளம் பாதுகாக்கப்பட வேண்டும்; அதற்கு ஜனநாயகம்வேண்டும் என்று குறுக்குமதியால் சிந்தித்தவர்களால் இது கட்டப்படவில்லை. கொள்கையில் இருந்து சிறிதும் பிறழோம், நழுவோம் என்று தமக்குத் தாமே உறுதி பகர்ந்துகொண்டு ஒரு அணியாய் இணைந்து தமது பிழைகளைத் தாமும் விமர்சித்து, விட்ட பிழைகளுக்காக மற்றவர்களிடமிருந்து கிடைத்த விமர்சனங்களை— கண்டனங்களை ஏற்று, திருத்தப்பட வேண்டும் என்பதற்காகத் தாமும் விமர்சித்து தோழமையுடன் சரியான செயல்களை எல்லோரும் ஏற்கும்வண்ணம் அறிந்துகொண்டு சரியான பாதையில் நாள் ஒரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்த இயக்கங்களும்—இயக்கத்தினர்களுக்கிடையே ஏற்பட்ட உருக்கொத்த தோழமைப் பிடிப்புமே இவ் வியப்புகளை உருவாக்கியதற்கெல்லாம் மூல காரணம்.

(.... 2ம் பக்கம் பார்க்கவும்.)

## சுதந்திரம் மனிதனது பிறப்புரிமை

படிப்பகம்

# நோக்கம்-திட்டம்-வளர்ச்சி

இரண்டாம் உலகமகா யுத்தம் முடிவடைந்தது; பரபரப்புடன் கூடிய தலைவர்கள் ஐக்கிய நாடுகள் மாமன்றமொன்றை உருவாக்கினார்கள்! இனி பிரச்சனைகளைப் பேச்சுவார்த்தைகளால் தீர்த்துவைப்போம்; மாபெரும் அழிவுள்ள பயங்கரமான யுத்தங்களும் ஆக்கிரமிப்புக்களும் இனி வேண்டாம், உலகிற்கு என்பதுவே அவர்களது ஆழ்ந்த பேராவல். ஆனால் மக்கள், எவரானாலும்— பிரச்சனைகள் எதுவானாலும் —தீர்க்கப்பட வேண்டும் என்பதையே இவ்விடத்தில் ஏற்றுக்கொண்டார்கள்! புதிய சுதந்திரப் போராட்டங்களால், புத்துணர்வு நிரம்பிய மக்கள் சோசலிசப் போராட்டங்களால் தோன்றிய புதிய நாடுகளை ஏற்றுக்கொள்ளத் தயங்காததும் இக் காரணத்தாலேயே! நியாயத்தின் பக்கம் போராட்டங்களுக்கு முடிவுகாண ஆதரவு நல்காதிருக்கவில்லை! உள்நாட்டுக் குழப்பங்களுக்குரிய உண்மைகளை ஏற்றுக் கொள்ளாதிருக்கவும் இல்லை!

பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை ஆளுவதும், சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை ஆளுவதும் எந்த நடுநிலையும், நல்லெண்ணமும், மக்கள் பாதுகாப்பும் விரும்பும் நாடுகளும் ஏற்றுக்கொள்ளாத ஒன்று! சிலர் தாம் தப்பிக்கொள்வதற்காக, இப் பிரச்சனை உலகில் பலநாடுகளின் உள்நாட்டுப் பிரச்சனையென்றும் கூறி, இப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண மனமில்லாமையை மூடிமறைக்கிறார்கள். இப் பிரச்சனையை உருவாக்கிய சிலர் தமதுபக்க விவாதத்தைப் பலப்படுத்துவதில் கச்சைகட்டிக்கொண்டு முன்நிற்கின்றார்கள். இன்னும் சிலரோ தமது அண்டைநாடுகளின் உறவுகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில், இவ் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டுக் கருத்துக்கூற, சரியானதை எடுத்துரைக்கப் பலமற்றவர்களாக இருக்கின்றனர். சிலரோ, தமக்குள்ளும் இதேவிதமான பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாதுவிருப்பதால், இவ்வகையான பிரச்சனைகளுக்குக் கருத்துக்கூறத் தகுதியற்று இருக்கிறார்கள்.

இன்று ஆபிரிக்கக் கண்டத்தில் சிறுபான்மையினரான வெள்ளையர்கள் பெரும்பான்மையினரான ஆபிரிக்கச் சுதேசிகளை அடிமைப்படுத்திவாழும் 'ரொடீசியா', 'தென் ஆபிரிக்கா' நாடுகளைக் கண்டிப்பதற்கும், ஆபிரிக்கநாடுகள் போர் தொடுப்பதற்கு உதவுவதற்கும் பல மேற்குநாடுகள் ஆதரவு நல்க முன்வந்துள்ளது, நாகரிக உலகத்துக்கு பெரும் எடுத்துக்காட்டு. அரசியல் பக்குவ நிலைக்கும் இதுவே அளவுகோல். சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை ஆளுகிறார்கள் என்பதற்காகமட்டும் அளிக்கப்படும் ஆதரவல்ல இது, அடக்கப்பட்டுள்ள ஒரு பகுதி மக்கள் சுதந்திரம் காக்கப் படுவதற்காக கொடுக்கப்படும் ஆதரவே இது! மக்கள் சுதந்திரம் என்பதுவே இங்கெல்லாம் முதன்மையாகிறது.

ஈழத்தவர் போராட்டமும் இதுவே! எம்மில் வாழத்துடிக்கின்ற சிலரும், சொத்து—சுகங்களைக் காக்கத் துடிக்கின்ற சிலரும் சுதந்திரத்தைத் தட்டிக் கேட்காமல், அன்றேல் அடித்துப் பறிக்க முனையாமல், சிங்கள ஏகாதிபத்தியத்துக்குக் கால்பிடித்து ஏங்கிக்கிடக்கிறார்கள். கால்பிடித்தால் தீர்த்துவிடலாம் என முனைகிறார்கள் என்றால், ஒன்று அவர்கள் சுயநலங்களைக்காக்க முனைகிறார்கள், அத்தோடு சுதந்திரமென்ற உணர்வற்று இருக்கிறார்கள் —மேலாக சுதந்திரத்தை உணர்ந்த உலகக் கண்ணோட்டத்தை நாடிபிடித்து அளந்தறியும் அரசியல் முதுமையுறுதிருக்கிறார்கள்.

'ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம்பெற ஆயுதம் தாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்றால் அதை அவர்கள் செய்வதில் தவறில்லை' என்று உபதேசம் செய்த சிறிமா அம்மையின் ஆழ்ந்த உரையைத்தன்னும் ஏற்றுக் கொள்ள முன்வரத் தயங்கினால், சுதந்திரப் போராட்டப் பாதையில் இருந்து இவ் இடறுகளை அழிப்பதைத்தவிர சுதந்திரப் பாதையில் நடக்க வேறுவழி கிடையாது.

எமது தாயகமாம் ஈழத்தில் தமிழர் சமதர்ம நல்லாட்சியை நிறுவும்வரை எமது எதிரிகளை அழிப்பதிலும், எமக்குள் பலவீனமான சுயநல, போட்டிமனப்பான்மையுள்ள சக்திகளை — கும்பல்களை — ஒழிப்பதிலும் தமிழர் கரம், மனம், பலம் ஒருபோதும் ஓயக்கூடாது. போராட்டக் களத்தில் சிங்கள ஏகாதிபத்தியத்தை முறியடிக்கும், ஈவிரக்கமற்ற போராட்டத்தில் உலக மக்களின் நல்லாதரவும், வாழ்த்தும் எமது நரம்புகளுக்கு வலிமைதரும்! எதிரிகளை நாசகாரரைப் புறமுதுகிட்ட போராட்டங்களுக்கு வேகமளித்தவை இவ் வெளியாதரவுகளே! அது வரும்வரை காத்திருக்காது, சுதந்திரத்தை விரும்பும் மக்கள் அதை அளிப்பார்கள் என்ற அசையா நம்பிக்கையுடன் எதிரிகளைச் சந்திக்கப் புறப்படுவோம்!

'எல்லோரும் வாழவேண்டும்' என்பதை மறந்து; 'இருப்பவர்கள் வாழட்டும்' என்று விழிப்படைவோம்! காலம் சுதந்திரத்திற்கு ஓர் அளவு கோலல்ல. சுதந்திரம் பிறப்போடுவந்து இறப்போடு மறைய வேண்டும். அதுவே சரியான கால அளவீடு என்பதால் காலம் கடத்துவதைக் கைவிட்டு கடமையுணர்ந்து செயல்படுவோம்!

## தமிழ் பேசும் மக்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சரியான கொள்கையுடன் நால்வர் இருந்தாலும் அது இயக்கமாகும். அக் கொள்கையை நிலைநாட்ட நால்வர் வாழ்ந்து வந்தால் அது நிச்சயம் வளரும். சரியானதைச் சிந்திக்கவும், உணரவும் முடிந்தவர்கள் தொகை அதிகரித்தால் பொய் அதை எதிர்க்கமுனையும். பொய், சதி, தீமை என்ற உணர்வு அதனிடம் உள்ளவரை அதனால் போராடமுடியாது. அதன் மனோபலம் பலவீனமாக இருக்கின்றவரை அது வெற்றி காணமுடியாது. இறுதியில் உண்மை வெல்லும்.

ஆதலால் மக்களுக்கு,

1. சரியான கொள்கை விளக்கம் வேண்டும்.
2. அதைச் சரியானதொரு இயக்க அடிப்படையில் மக்கள் எடுத்துச் செல்ல வேண்டும்.
3. சரியென்று உணருபவர்கள் கொள்கைகளை திடமனதுடன் எடுத்து மக்களிடையே பரப்பி அவர்களையும் தமது கடமைகளை செய்வதற்குத் தயார்ப்படுத்த வேண்டும்.
4. இறுதிவெற்றி காண்கின்றவரை விரைவாகவும், திடமாகவும் திட்டமிட்டு அதற்காக உழைக்கவேண்டும்.

சீனாவின் சமதர்ம இயக்க வளர்ச்சியை ஒருதரம் நோக்குவோம். முதலாவது கட்சி மகாநாட்டு அங்கத்தவர்கள்தொகை,

| | | | |
|---|---|---|---|
| | 1921 | — | 57 |
| 2 வது | 1922 | — | 123 |
| 3 வது | 1923 | — | 432 |
| 4 வது | 1925 | — | 1000 |
| 5 வது | 1927 | — | 57900 |
| 6 வது | 1928 | — | 40000 |
| 7 வது | 1945 | — | 1210000 |
| 8 வது | 1956 | — | 10734000 |
| | 1969 | — | 20000000 |

உலகத்தில் ஒரு மாபெரும் இயக்கம் வளர்ந்த விதம் இதுவே. உண்மையை உணர்ந்தவர்கள் தொகை அதிகரித்தது இவ்விதமே. இரண்டு கோடி உணரமுடிந்தது இவ்வளவு காலங்களின் பின்பே. ஆனால் அங்கு கல்வியறிவு, தொடர்பு, பிரச்சாரம், விளக்கம் அதிவிரைவாகக் கிட்டவில்லை. எமது நிலைவேறு. எமது எதிரிகள் யார், எப்படி எதிர்க்க வேண்டும், எப்படியான தீர்வு நிரந்தரமாகப் பிரச்சனைகளைத் தீர்க்கும், எமது கடந்தகால அனுபவங்கள் என்ன, எமது பிரச்சனைகளைத் தீர்க்க முடியாதவாறு நாம் விட்ட பிழைகள் என்ன,........

(.... 7ம் பக்கம் பார்க்க)

"சாதி ஒழித்துச் சமயப்பித்தம் தொலைந்தால்
மீதி இருத்தல் விடுதலைதான் என் தமிழா
எல்லாரும் ஒப்புடையார் என்ற பெருநோக்கம்
எல்லார்க்கும் ஏற்பட்டால் இன்பமடா என் தமிழா!" — பாரதிதாசன்

# விடுதலை வேண்டுமா?

கருத்துவிடுதலை பெற்ற ஒருவனுக்குத் தோன்றும் பல அடிப்படை எண்ணங்களுள் 'தன் நாட்டுக்கு விடுதலை வேண்டுமோ?'' என்ற எண்ணமே முதலில் தோன்றும். எண்ணவும், எழுதவும், எதுவும் பண்ணவும், பழகவும், பயிலவும், பயிற்றவும் வாய்ப்புத்தரும் நாடுகளில்கூட இனவிடுதலை, மொழிவிடுதலை, நாட்டுவிடுதலை ஆகிய மூன்று விடுதலைக் கருத்துக்களுக்கும் வாய்ப்பூட்டிட்டே வருகின்றனர். எடுத்துக் காட்டு இரண்டு. ஒன்று இந்தியத் துணைக்கண்டம்; மற்றது சிங்கள இலங்கை.

ஆங்கிலன் வந்து கால்வைப்பதற்குமுன் தனித்தனியே இருந்த தமிழ்நாடும், தமிழ் ஈழமும், ஆங்கிலன் போனபின் ஆண்டிடவந்த இந்தி, சிங்கள வெறியர்களிடம் அடகு வைக்கப் பட்டுவிட்டன.

அரசியல்பேசி விடுதலைகேட்ட காலம் மலையேறி விட்டது.'கருவி எடுத்தாவது இனத்தையும் நாட்டையும் மீட்பது' என்ற புதிய புரட்சிக் கருத்துக்கே இன்று காலம் வழி வகுத்துள்ளது. இந்தியா ஒன்று என்ற மயக்கக் கிறக்கத்தில் மக்களைக் கிடத்தியதில் பெரும்பங்கு வரலாறு தெரியாத பதவிவெறிபிடித்த அரசியற் போலிகளையே சாரும். ஈழத்தில் இன்று இருக்கும் நிலையும் அதுதான்! பண்டா போன்ற காட்டுவிலங்குகளுக்குச் சூடுபோட்டு உணர்வேற்றுவதற்கு மாறாக சுவையான அரசியல் பேசிப்பேசியே 28ஆண்டுகள் போய்விட்டன. சிங்களன் உச்சாணிக் கொம்பேறிக் குந்தி தமிழர்களை நாடற்ற பிறவிகளாக்கி, நரம்பில்லாத சில ஆட்களை அரசியலென்ற வாணவேடிக்கைக் காட்சிகளில் மக்கள்முன் காட்டி இனம்தெரியாத வல்லடிமைகளாய் எம்மவரை ஆக்கிவருகின்றான்.

பலஸ்தீனக் காரர்களைப் பாருங்கள். அவர்களின் வறண்ட நிலத்தைப் பெறுவதற்காகக் கடந்த பல ஆண்டுகளாகப் புரிந்துவரும் போராட்ட வேகாட்ட முறைகளைச் சற்றே கவனியுங்கள். காட்டு மாக்கள் என்று கிண்டல்செய்யப்பட்ட ஆபிரிக்க மக்களைக் காணுங்கள். வெள்ளையரை விரட்டிய வேகத்தையும், விடுதலை பெற்றபின் வளரும் முன்னேற்ற தாகத்தையும் அந்நாடுகள் நமக்குப் பறை சாற்றவில்லையா? இன்னும் எதற்காக நாம் தயங்கிக் கிடந்து மடியவேண்டும், ஆரியக் கொள்ளையர்களிடம்!

இந்த எண்ணம் அண்மையில் எந் தமிழர்க்கு வந்துவிட்டது என்று தெரிவிக்கின்றன ஈழ விடுதலை முன்னணி, தமிழர் முன்னேற்றக் கழகம் போன்ற புரட்சி விடுதலை இயக்கங்கள். இவற்றுள் இணைந்து தாம் இழந்த தமிழ்நிலத்தை, ஈழமண்ணை மீட்கப் பாடுபடுதலே உரிமையுணர்ச்சியும், கருத்து விடுதலையும் பெற்றதாகப் பறைசாற்றித் திரியும் பகுத்தறிவுத் தமிழர்களின் கடமையாகும்.

நெடுமை நெடுங்காலமாய் எம்மவரை ஒழிப்பதற்கு ஆரியப் புல்லுருவிகள் பயன்படுத்திய சமையத்தையும், அவைகூறும் கடவுளர்களையும் கட்டி அழுதுகொண்டு இருப்பதில் கடுகளவாகிலும் பயனுண்டா? தென்தமிழ் நாடே இந்திநரிகளின் வெறிக் கொடுமைக்குள் சிக்கி அழிந்துபோய் விடுமானால் "தென்னுடைய சிவனே போற்றி!" என்றும், "தென்கலை வைணவம் சிறந்தது" என்றும் எந்த நாட்டைக்காட்டி கூறப் போகின்றீர்கள்? உண்மையில் நீங்கள் இறை நம்பிக்கைக் காரராக இருந்தால் இக்கூற்றுக்கு உங்கள் மனச்சான்றின்மேல் கருத்தூன்றி விடைதாருங்கள். இல்லை, "ஆரியப் பார்ப்பான் உண்டெறிந்த எச்சிற் பருக்கைகளே எங்கட்குப் போதும்! அவன் காலைக் கழுவிக் குடிக்கும்தண்ணீரே தென்கிளங்காயின் நன்னீரினும் சிறந்தது! கருவறையில் உள்ள கடவுட்படிமத்தை தொலைவில் நின்று எட்டிப்பார்த்து, அந்த ஆரிய நாய்களுக்குப் படையலும் காணிக்கையும் தந்து, மனச்சான்றை ஏமாற்றிக் கொண்டு இப்படியே காலங் கழித்துவிட்டாற் போதும்! இதனாலேயே எங்கள் நாட்டுக்கு விடுதலை கிடைத்துவிடுவதாக இருந்தால் — ஆண்டவன் அருள் இருந்தால் — கிடைக்கட்டும்!" என்று திண்ணைச் சோம்பேறிக் கின்னரம் கொட்டிக் கொண்டிருக்கப் போகின்றீர்களா?

இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிறோம் நாம்! கி.மு. 50 ஆம் நூற்றாண்டிலேயே கடலாட்சி பெற்ற தமிழன் (வடிம்பலம்ப நின்ற பாண்டியன்) சாலித் தீவைக் (JAVA) கைப்பற்றி அத் தீவின் கடலோரத்தில் தன் இரு கால்களைப் போன்ற படிமம் செய்து அதனைக் கடல் அலை எப்போதும் வருடிக் கொண்டிருக்குமாறு செய்தான் என வரலாறு படிக்கிறோம்! தன் வெற்றியின் சின்னமாக அன்று படிமம் செய்த தமிழனின் வழிவந்த நீங்கள், உங்கள் நாட்டில், அது தமிழ்நாடாக இருந்தாலும் சரி, ஈழத் தீவாக இருந்தாலும் சரி, மக்கள் அடிமைகளாக —இரண்டாந்தர குடிமக்களாக— நாடற்ற ஏதிலிகளாக பலவாறு துன்புற்று நைந்தழுகின்ற குரலைக்கேட்டும் மனந்திருந்தாது, 'ஆரியப் பார்ப்பான் மெச்சுவான்' என்றுகருதி, 'கோயில்' என்றும், 'சைவம்', 'வைணவம்' என்றும் 'சாதிகள்' பேரால்— இந்த இருபதாம் நூற்றாண்டிலும் — அஃறிணையினும் கீழாய் அருவருப்பான 'திருப்பணி'களைப் புரிகின்றீர்களே! இதைவிட உங்களைப் பெற்ற தாய்நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைதவறிய இழிசெயல் வேறுண்டா???

⊗⊗⊗ உங்கள் தாயை ஒருவன் பெண்டாள முனையும் போதும் இப்படித்தான் கைகட்டிப் பார்ப்பானின் காலைக்கட்டிக் கொண்டு சும்மா இருப்பீர்கள் போலும்!

⊗⊗⊗ உங்கள் மனையாள் உடல்நோயால் வருந்திப் புழு வாய்த் துடிக்கின்ற போதும் அவளிடம் காம இன்பம் நுகரும் கண்ணற்ற அறிவிலிகளா நீங்கள்?

⊗⊗⊗ உங்கள் குழந்தைகள் பற்றி எரியும் வீட்டில் பதை பதைத்து அஞ்சி அலறித் திகைத்திருக்கும்போது தெருவில் நின்று தென்பாங்கு பாடும் பகுத்தறிவுக் கொழுந்துகளா நீங்கள்?

⊗⊗⊗ உங்களை ஏற்றிச் செல்லும் மரக்கலம் ஆழ்கடலில் முழுவதுமாக அமிழ்கின்ற நேரத்தில் ஆரியனின் வேத மந்திர வெறுங் கூச்சல்களை உருப்போட்டுப் பழகிக் கொண்டா இருப்பீர்கள்?

வேண்டா இந்த விளையாட்டு! எச்சரிக்கை!!! 'துள்ளி வருகிறது வேல்! பகையே தொலைவில் ஒதுங்கிப் போ!" என்று சொல்லிவருகின்ற தமிழ்மான மறவர்களின் வெஞ்சினம் ஒருநாள் உங்களின் கடமைமறந்த— இனப் பற்றற்ற, தந்நலமான —உப்பரிக்கை வாழ்க்கையின் மேல் திரும்பத்தான் போகின்றது! நீங்கள் வணங்கும் தெய்வங்களும் உங்களைக் காறி உமிழ்ந்துவிட்டு, உங்கள் குற்றக் கைகள் கட்டிய கோயில்களை வெறுத்து ஒதுக்கிவிட்டு, விடுதலை பேசும் மறவர்களை ஊக்கப் படுத்துவதற்காக, அவர்களிடம் சென்றுவிடப் போகின்றன! நீங்கள் நம்புகின்ற பார்ப்பன ஊர்தின்னிகள் இருந்த இடந் தெரியாதவாறு மறைந்தொழியத்தான் போகின்றனர். அப்போது வருந்திப் பயனே இல்லை!!! உங்களுக்கு ஐயோ!!!

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்" (திருக்குறள்—1023)

www.padippakam.com



# ஈழத் தமிழினமே!

## விடுதலைவீரர் சிறையில்வாட, குருமதியாளர் சதியாட்டம் ஆடுவதா?

ஈழத் தமிழினமே! சாமியின்பேரால் லண்டன் நகரில் சதிராட்டம் ஆடும் ஆசாமிகளை அடையாளம் தெரிந்து கொள்ள முடியாதபடி கோவில் மாயையில் மூழ்கி கோமாளிக் கூத்தாடும் ஏமாந்த தமிழினமே! 'பித்தெல்லாம் உடைய உலகர்தம் கலகப் பிதற்றெல்லாம் என்று ஒழிந்திடுமோ' என்றுகேட்ட இராமலிங்க அடிகளுக்கு நாளுக்குநாள் சவால்விடும் சொரணையற்ற தமிழினமே! "வேதாகமங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர், வேதாகமத்தின் விளைவகற்றி— சூதாகச் சொன்னதலால் உண்மைவெளி தோன்ற உரைத்தலில்லை என்ன பயனே இவை?" என்று அவர் கேட்டதற்குப் பதில்சொல்ல வழியில்லாமல் பல்லிளிக்கும் தமிழினமே! உன்னோடு ஒருவனாக ஈழத்தில் பிறந்துவிட்ட பாவத்துக்காகவும், என்றும் என்னினமும் எந்நாளும் வாழவேண்டும் என்ற சுதந்திர தாகத்துக்காகவும், 'கண்ணாக மணியாக கட்டிக்கரும்பாக இடிமழை புயலிலும் பிடிமனம் தளராது உன்னையும் என்னையும் பாலூட்டிவளர்த்த எம் அன்னைகள் மானத்தோடு உயிர்வாழ வேண்டுமே' என்ற ஏக்கத்துக்காகவும், தாய்தந்தையரினது தள்ளாதவயதில் அவர்களுக்குத் தெம்பூட்டிப் பராமரிக்க வேண்டிய தனயன்மார்—எம் உடன்பிறப்புக்கள்— கொடுங்கோலரின் அரசியற் பாழ்சிறையில் அநியாயமாக நொந்துமடிவதைக் கண்கொண்டு பார்க்க முடியாமல் இருக்கும் தாக்கத்துக்காகவும், மறுபடியும் உன்னிடம் கோவிலின்பேரால் குருமதியாளர் ஆடும் சதியாட்டங்களைப் பற்றி எடுத்துச்சொல்வது என் கடமையாகிறது.

ஈழத்திலே உன் சோதரர் அம்மையாரின் அநியாய ஆட்சியின்கீழ் படும் இன்னல்களையும், அநுபவிக்கும் தொல்லைகளையும் சில காலத்துக்கு முன்னர்வரை வெளியுலகம் அறிந்துகொள்ள வழியில்லாமல் இருந்ததை நீ அறிவாய்! ஆனால் தமிழனின் சுதந்திர வாழ்வில் நம்பிக்கையும், விடுதலை வேகத்தின் முக்யத்துவமும் உணர்ந்த பல மறத்தமிழர்களால் உலகெங்கும் இருந்த நிலை இன்று மாற்றியமைக்கப் பட்டுள்ளது. ஒன்றிய அரசிலும், பிரான்சு நாட்டிலும் ஈழ விடுதலை முன்னணியினர் இந்தப் பங்கைச் செய்தனர்; செய்கின்றனர். இன்னும், அமெரிக்கா, கனடா, ஆபிரிக்கா, இந்தியா போன்ற பல நாடுகளிலும் வதியும் விடுதலை விரும்பிகள் அந்தந்த நாடுகளில் ஈழத் தமிழனின் விடுதலைக்குரலைப் பறைசாற்றி வருகின்றனர். இந்த மாபெரும் முயற்சியால் இன்று உலகம் ஈழத் தமிழர்கள்பால் தனது கண்களையும், காதுகளையும் திருப்ப ஆரம்பித்துள்ளது. இப்படிச் சந்தர்ப்பம் கைகூடிவரும் சமயத்தில், சமீபத்தில் லண்டனிலே நடந்தேறிய செயல் ஒன்று தமிழர்களைத் தலைகுனிய வைத்துள்ளது!

ஈழத் தமிழினமே! சிங்கள அரசாங்கத்துடன் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர் ஈழத்தவர் என்று யார் சொல்லியும் அறிய வேண்டிய நிலையில் நீ இல்லை. அப்படி நீ இருந்தாயானால் உன்னையும் தமிழனென்று கூற விடுதலை வேங்கைகளும் தயாராகவில்லை! இனவெறி பிடித்த சிங்கள விளையாட்டுக் குழுவொன்று இங்கிலாந்து வந்தபொழுது, தம் நல்வாழ்க்கையையும்— நற்பெயரையும் பொருட்படுத்தாது ஆட்டமைதானத்துக்குள் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்து, நீதிமன்றம் சென்ற ஈழ தமிழ் இளைஞர்களின் விடுதலை வேட்கை உன் மனக்கண்ணைவிட்டு நாளுக்குநாள் மறைந்து கொண்டல்லவா இருக்கின்றது! "ஆகா! எம் வாலிபர் சிறந்த முறையில் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்" என்று, அன்று நீ சொல்லியது இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது. உனது வாயில் இருந்துவந்த புகழுரைக்கோ அல்லது தம்பெயரை சரித்திரத்தில் பொறிக்கவேண்டுமென்ற போலி விளம்பரத்துக்கோ வேண்டி அந்தத் தூய உள்ளங்கள் அச் செயலைச் செய்யவில்லை என்பதை நீ மறந்தாலும் நான் உனக்கு இடித்துக் கூறிக்கொண்டே இருப்பேன்!

## ஈழத்திலே ஒரு துரையப்பா! லண்டனிலே அவர் பெரியப்பா!!

இனப்பாரபட்சத்தை உலகத்துக்குப் பறைசாற்றும் சிங்களக் கொடுங்கோன்மை அரசாங்கத்துக்கு, சந்தர்ப்பம் கிடைக்கும் வேளைகளிலெல்லாம், ஓயாது எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியது அல்லவா உன் கடமை! நீ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கும் அந்த எதிர்ப்புக்களும், பகிஷ்கரிப்புக்களும் அல்லவா விடுதலை வீட்டைக் கட்டியெழுப்பும் தூண்களாக அமையவேண்டும்! இவைதனை நீ தளராமல் செய்வாய் என்றல்லவா, எவ் வழியும் அறியாமல் தவித்துக் கொண்டிருக்கும் எம் தமிழ்நாட்டு இளஞ்சிங்கங்கள், உன் கையை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீ செய்வது என்ன? தமிழுக்குத் தொண்டு செய்கிறோம்; தாய்நாட்டு விடுதலைக்கு வித்திடுகிறோம் என்று எழுத்தில்மட்டும் வீராவேசம் பேசி, வெளிநாட்டு உதவியை வேண்டி நிற்கும் இளைப்படைந்த தாய் நாட்டுத் தமிழினத்துக்கு நம்பிக்கை ஒளியையூட்டி, அவர்களின் நம்பிக்கைப்போர்வையால் உன் சுயநலம்கலந்த நச்சு மனத்தைப் போர்த்தி இங்கிலாந்தில் பேயாட்டம் ஆடுகின்றாய்! தனக்காக வாழாமல் மக்களுக்காக வாழ்வது என்பது எல்லாராலும் செய்ய முடியாத ஒன்று! ஆனால் அந்நிலைக்குப் பெரும்பாலானவர்கள் வரவேண்டுமென்பதுதான் தமிழ்நெஞ்சங்களின் பேராவல்! ஆனால் அது முடியாவிட்டால், உனது சொந்த வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டு தமிழ்மக்கள் வாழ்க்கைக்குப் பங்கம் விளைவிக்காமல் வாழ்வதுதான் முறை! அப்படி நீ இருந்துவிட்டாயானால், "இதுதான் எனது வாழ்க்கை; பொதுநலத்துக்குப் பாடுபட என்னால் முடியாது; ஆனால் பொதுநலத்துக்குத் தீங்கிழைக்காமல் வாழ்ந்துவிடுகிறேன்' என்று நீ பகிரங்கமாகச் சொல்லிவிட்டாயானால், உன்னை யாரும் எதிரியாகக் கணிக்கமாட்டார்கள்; உன்பக்கம் தலைவைத்துப் படுக்கமாட்டார்கள்; கையாலாகாத உன்னைப்பற்றிக் கடுகளவும் கவலைப் படவும் மாட்டார்கள்! அதைவிட்டு, "நான் செய்வதுதான் தொண்டு; சொல்வது தான் விடுதலைக்கு வழி" என்று தாய் நாட்டு மக்கள் மத்தியிலே போலிப்பிரச்சாரம் செய்துவிட்டு "எதிரியின் எச்சிப் பருக்கையையும் எடுத்துக் கொள்வோம், வந்ததுவரை லாபம்" என்றுகூறி காக்கைவன்னியன், எட்டப்பன், துரையப்பன், அருளம்பலம் வரிசையிலே அடுத்ததாகச் சேர்வதற்குத் தயாராக நின்கின்றாயே!

## ஐரோப்பியத் தமிழர்களும், பெயர் பொறித்த தெய்வங்களும்!

சுயநலத்தில் சுழன்று, கயமையில் கலந்து காட்டெருமையின் நிலைக்கு வந்திருக்கும் களங்கம் நிறைந்த தமிழினமே! தாய் நாட்டை மறந்து, ஐரோப்பாவில் வாழ்வதனால், 'ஐரோப்பியத் தமிழன்' என்று உன்னை நீயே அழைத்துக்கொள்ளும் இழிநிலையை யாரிடம் சொல்லி அழுவது? உன்னிடமேயே மறுபடியும் கேட்கிறேன்! 'இந்தநாட்டு அரசியல் நிலைமை மாறி, உன்நாட்டுக்குச் சென்றுவிடு' என்று உன் பிடரியிலே கைவிழும் வேளையில் 'நான் ஐரோப்பியத் தமிழன்' என்று சொல்லியா நீ வாதிடப் போகின்றாய்? கருப்புத் தோலுடன் ஐரோப்பியன் இருந்ததில்லை என்று உன்னைப் பார்த்துக்கூறி, எள்ளி நகையாடி கடலிலே பிடித்துத் தள்ளும்நிலை உருவானாலும் உருவாகலாம். தாய்நாட்டை மறந்துவிட்ட உனக்கு தஞ்சம்புக ஏது இடம்? நீ கட்டும் கோவில்களுக்குள் சென்று அடைக்கலம் புகப் போகின்றாயா? "ஐயோ! இப்படியொரு தத்தளிக்கும்நிலை வருமென்று தெரிந்திருந்தால், இவனால் கட்டிய கோவில்களுக்குள் இருந்திருக்கமாட்டோமே!" என்று அலறும்—உனது பெயர்களைத் தன் காலடியில் தாங்கிநிற்கும் —உன்னால் உபயம் அளிக்கப் பட்டுள்ள கடவுள்களும் உன்னோடு சேர்ந்து கடலில்லல்லவா மூழ்கப் போகின்றார்கள்!

'நாம் வாழும் நாட்டின் அரசியல்நிலை அறியாத அப்பாவி உளறுகின்றான்! இங்கு நாமெல்லாம் பிரித்தானியக் குடிமக்கள்! எம்மை எந்நாளும் யாரும் பிடித்து

**தனிநாடு நிறுவப்படும்வரை**

படிப்பகம்

www.padippakam.com



வெளியே அனுப்ப முடியாது!' என்று நீ போடும் கூக்குரல் என் காதில் விழுகின்றது. சரி, எனக்குத்தான் அரசியல் அறிவில்லை; அந்தப் பாக்கியத்தைப் பெற்ற சந்தர்ப்பவாதி நீயேதான் என்றே வைத்துக் கொள்வோம்; நீ லண்டனிலே கட்டப்போகும் கோவில்களில் உன்னால் வைக்கப்படப் போகும் தெய்வங்கள் நிரந்தரமாகப் பள்ளிகொள்ளப் போகின்றன என்பதையும் ஏற்றுக் கொள்வோம்! அதற்காக, கோவில்கட்டும்நோக்கத்துக்காக, நீ நிதியுதவிக் காட்சிகள் நடாத்தும் வேளைகளில் தமிழினத்தின் பரமவைரிகளான சிங்கள அரசாங்கத்தினது தூதுவர்களையா தலைமைதாங்க அழைப்பது? "நமது நாட்டின் தூதுவரை அழைப்பதில் என்ன இருக்கிறது? அவரின் தயவைப் பெற்றாலல்லவா ஈழத்திலே நாம் வாடகைக்கு விட்டுவந்த வீடுகளை அரசாங்கம் அபகரிக்காமல் இருக்கும்? தமிழர்களாகிய எங்களது வீடுகளை சிங்கள அரசாங்கம் அபகரிப்பதில் உங்களுக்கென்ன அவ்வளவு திருப்தி? அத்தோடு அரசியலுக்கும் சமயத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது?" என்று நீ கேள்விக் கணைகளை அள்ளிவீசுவது எனக்குத் தெரிந்ததுதான். அவைகளுக்கு ஒவ்வொன்றாக விளக்கம் சொல்வதும் என் கடமையாகிறது.

## ஆண்டதற்குச் சான்றில்லை என்றவர், ஆட்டத்திற்குத் தலைமை வகிப்பதா???

'நமது நாட்டின் தூதுவரை அழைப்பதிலே என்ன இருக்கின்றது?' என்ற கேள்வியின் பதில் உனக்கு விளங்கிய ஒன்றுதான்! நம் நாடு சிறீ லங்காவல்ல, ஈழம். ஈழத்துக்கு இன்னும் தூதுவரைத் தமிழர்கள் நியமிக்கவில்லை. 2500 வருடங்களுக்கு மேல் முப்படைந்த எமது ஈழத்தின் மறுபிறப்புக்குத் தடைபோட்டுக் கொண்டிருக்கும் சிறீ லங்காவை எப்படி எமது நாடு என்று நீ கூறமுடியும்? "ஈழத்தை தமிழர் ஆண்டதற்குச் சரித்திரச் சான்றில்லை" என்றும் "அவர்கள் அங்கு இன்னற் படுகிறார் என்பதில் எவ்வித உண்மையும் இல்லை" என்றும் இங்கிலாந்துப் பத்திரிகையில் கடிதம் எழுதி கண்மூடித்தனமான பொய்யைச் சொன்ன, சிறீ லங்காத் தூதுவர் என்று தன்னைத்தானே கூறிக்கொள்ளும், மென்டிசை எப்படி நம் நாட்டுத் தூதுவர் என்று நீ அழைக்கமுடியும்? தமிழர்களின் சரித்திரத்தையும், அவர்கள்படும் தரித்திரத்தையும் மறந்து நீ விம்புக்காக விவாதிப்பதாக இருந்தால் உனது பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்கள் எல்லாம் பயனற்றதாகவே போய்விடும்!

அடுத்த உனது கேள்வி, 'தமிழனாகியவுனது வீடுகளைச் சிங்கள அரசாங்கம் அபகரித்துவிடும்' என்ற பயத்தால் வந்தது! உனது பாவனைக்குத் தேவையில்லா விட்டாலும், அதன்மூலம் பணம் சம்பாதிக்க எண்ணும் உனது முதலாளித்துவ மனப்பான்மைக்குத் 'தமிழன் நான்' எனும் விளக்கம் கொடுக்காதே! உன் தாய்தந்தையர் விட்டுவந்த பரம்பரைப் பணத்தாலும், மனைவி அள்ளிக்கொடுத்த சீதனச் சொத்துக்களாலும், தேவைக்கதிகமாகவே, நீ விட்டுவந்த சொத்துக்களை தேவையுள்ளவர்கள் எடுத்துக் கொள்வதுதானே முறை! உன்னைப் போன்றவர்கள் இருப்பதால்தான் இல்லாதவன், குறைந்தவன் என்றநிலை இன்று உலகில் இருக்கின்றது. உன்னிடம் அதிகம் சேர்ந்திருப்பது, குறைந்திருந்தவனை இல்லாதவனாக்கியதால்தான்! இன்னும் என்ன வேண்டும் உனக்கு? பள்ளிசென்று படித்தால் படிப்பு வருமே! பயிற்சியில் ஈடுபட்டால் மன அடக்கம் தானாய் வருமே! எந்தத் தொழிலையும் தொழிலாகக்கருதினால் பணமும், உழைப்பும் வருமே! ஒழுங்கான ஒரு சமதர்ம அரசை நிலை நாட்டி, அந்த அரசோடு ஒத்துழைத்தால் அல்லது போராடினால் பண இடைவெளியைக் குறைக்கலாமே! இவ்வளவும் ஒழுங்காகக் கிடைக்கக்கூடிய ஒரு அமைப்பு இருந்தால் பிரச்சனைகள் இல்லாத நிம்மதி வருமே! குடும்பப் பிரச்சனைகளை உருவாக்கும் குடும்பப் பொருளாதாரமே, நல்லாட்சி ஒன்றால்தான் பிரச்சனைகள்இன்றி அமைக்கப்படுகின்றது. இவைகளெல்லாம் நீ அறியாததா? இல்லை, "பொருளாளி இவ்வுலகை விழுங்குகின்றான், பொதுவுடையோன் உலகத்தைத் திருத்துகின்றான்" என்ற புரட்சிக் கவிஞரின் பாடலை மறுபடியும் உன் காதுகளில் புகுத்தவேண்டுமோ?

அடுத்ததாக நீ கேட்டது, "அரசியலுக்கும் சமயத்துக்கும் என்ன சம்பந்தமென்பது!" அரசியலையும் சமயத்தையும் நீ வேறுபடுத்திப் பேசமுனைந்த அவ்விநாடியே உனக்கு அரசியலிலும் அக்கறையில்லை, சமயத்திலும் அக்கறையில்லை, அரசியல் என்பதின் அடிப்படை விளக்கமும் இல்லை, சமயம் காட்டும் சன்மார்க்க நெறியென்பது வந்துற்றதே சமதர்ம அரசியல்அறம் பிழைத்ததால்தான் என்ற அறிவும் இல்லை! நீ ஓதுவது அனைத்தும் கபட நாடகமே! என்ற உண்மையை ஏற்றுக்கொண்டு விட்டாய். அரசியலையும் சமயத்தையும் எப்படிப் பிரித்துப் பார்க்க முனைந்தாய்? மனிதர்களின் சாதாரண சமுதாய வாழ்க்கையே மாபெரும் அரசியல் களங்களுக்கு வழிவகுத்தன என்பதும், பொய்—களவு காமம்—வஞ்சனை—சூது—கொலை என்பனவற்றில் இருந்து மனிதனை ஓரளவிற்கேனும் பாதுகாக்க வேண்டும் என்ற—சமுதாய நலன் கருதியே—காரணத்துக்காகவேதான் சமயங்கள் உருவாகின என்பதும் உனக்கு விளங்கவில்லையா? சீரான சமுதாய வாழ்க்கைக்குத்தான் சீர்பட்ட அரசியல்; அதே சமுதாய வாழ்க்கை ஒழுங்காக அமையாதவிடத்துத்தான் சமயம்!

## கைலஞ்சம் பெறும் கடவுள்! கையேந்தி நிற்கும் பக்தன்!

சமூகத்தைச் சிதைக்காத கட்டுப்பாடுள்ள ஆட்சிநிலவும் நாடுகளில் குற்றம் செய்ய மனிதன் அரசுக்கும் அஞ்சுகின்றான்; தான் கடைப்பிடிக்கும் அரசியல் நெறிக்கும் அஞ்சுகின்றான். செய்ய வேண்டிய தேவையும் அவனுக்கில்லை. கட்டுப்பாடு குலைந்த இடங்களில் தயங்காது பாதகத்தைச் செய்துவிட்டு பாவ மன்னிப்பிற்காகக் கடவுளிடம் போய்விடுகின்றான் மனிதன். குற்றம் குறைகள் யாருக்கெதிராக??? கடவுளுக்கெதிராகவா? இல்லை. மனிதருக்கெதிராகத்தான்! இருப்பவனும் இல்லாதவனும் இருப்பதாலேயே களவு தோன்றுகின்றது. ஏழையிடம் ஏழைகள் இல்லை! பணக்காரனிடம்? அவன் சமூகத்தைக் களவாடுகின்றான். பிற்போக்கு அரசியலும், சமூகமும், சட்டமும் அவனுக்குப் பாதுகாப்பளிக்கின்றன. இப்படிப்பட்ட அமைப்பு முறையை இல்லாதொழிப்பது அரசியலால்தான் முடியும். ஆகவே பாவமும் புண்ணியமும் அரசியலால்தான் ஏற்படுகின்றது. சீனாவிலும் இரசியாவிலும், இருப்பவன், இல்லாதவன், ஏழை, பணக்காரன், கொடையாளி என யாரும் கிடையாது. எல்லோருக்கும் அங்கு வேலையுண்டு. உழைப்பிற்கேற்ற ஊதியம் உண்டு. வேதன வேறுபாடு— இடைவெளி மிகவும் குறுகியுள்ளது. ஆதலால்தான் சமூகக் குறைபாடுகள் மிகவும் குறைந்தளவில் காணப்படுகின்றன. இங்கேயெல்லாம் பாவமன்னிப்புக்காக கடவுளிடம் செல்லவேண்டிய தேவையே ஏற்படுவதில்லை! மன்னிப்புப் பெறுவது தீமையை ஏற்றவனிடம், கடவுளிடமல்ல!! மனிதனிடம் மன்னிப்புக்கேட்க மனம் கோணுபவன்தான் இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு, இவ்வுலக வாழ்வை மறந்து அவ்வுலக வாழ்க்கைக்காக ஏங்கி நிற்கின்றான். கடவுள் என்ன கைலஞ்சப் பேர்வழியா? கட்சியரசியல் நடத்துகின்றவரா? தனது பக்கத்துக்கு ஆட்பலம் சேர்க்கும் ஆசாமியா? அப்படிப்பட்ட பிரகிருதியாக அவர் இருந்தால்தான் உன்னைப் போல பிழைசெய்பவர்களுக்கு எல்லாம் புகலிடம் அழிக்க முடியும்!

## நாடெல்லாம் கோவிலானால், மனிதரெல்லாம் தெய்வமாவர்!

ஈழத் தமிழினமே! உன்னைப் போன்றவர்கள் இறைவனைக் காணவேண்டும் என எண்ணுவது விரும்பினால், சமுதாயப் புரட்சியினால் ஏற்றத்தாழ்வை அகற்றி ஏழையை சிரிக்கவை! அங்கு நிச்சயம் இறைவனைக் காண்பாய்! மனிதனோடு ஒன்றாக வாழ முடியாதவர்கள்தான் இறைவனோடு ஐக்கியமாகத் துடிக்கின்றார்கள். முறிகண்டிக் கோவிலில் தேங்காய் உடைப்பவர்களும், மடுத் திருப்பதியில் மெழுகுவர்த்தி கொளுத்தி—செபமாலை உருட்டி, உதடுகளிடையே முணுமுணுப்பவர்களும், பணமுடிப்பு வழங்கிப் பாவத்தைப் போக்க நினைப்பவர்களும், மசூதிகளில் குப்புற விழுந்து தொழுகை செய்பவர்களும், புத்தம்—சரணம்—கச்சாமி என்று (அடிக்கொரு தடவை சொல்லாது விட்டால் மறந்துவிடப் போகிறோமே என்ற பயமோ?) அரட்டிக் கொள்பவர்களில் பலரும் சமுதாயத்தில் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்பவர்கள் என்பது உனக்குத் தெரியாதா? ........

(7ம் பக்கம் பார்க்க.)

# தமிழினம் ஓயாது

படிப்பகம்

www.padippakam.com



# சிறுபான்மை உரிமைக் குழுவினது இலங்கைத் தமிழர்கள் பற்றிய அறிக்கை

## கல்வி

சென்ற இதழ் தொடர்ச்சி.....

தமிழர்கள் தாம் படிப்படியாக தம் உயர்கல்வியில் நசுக்கப்படுகிறோம் என்பதைவிட மிகவும் ஆழமான அதிருப்தி தருகின்றவைகளான நிகழ்ச்சிகள் எதுவும் இருக்கவில்லை. தற்போது புதிதாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள கல்வித் தரப்படுத்தல் முறையைப் பற்றிக் குறைபடுகிறார்கள். இம்முறையில் சர்வகலாசாலை அநுமதியைப் பெறுவதற்கு மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் புள்ளிகளில் உள்ள வித்தியாசங்களானவை சில குறிப்பிட்ட மொழி பேசுபவர்களுக்கும், அல்லது சில மாகாணங்களைச் சார்ந்த மாணவர்களுக்கும் அநுகூலமளிக்கக் கூடியதாக உள்ளது. இப் பிரச்சனை தமிழர்களைப் பொறுத்தமட்டில் மிகவும் சிக்கலானது. ஏனென்றால் அங்கில மொழியில் உயர்கல்வி பெறுவதில் அவர்களிடம் காணப்படும் திறமையானது அவர்கள் சனத்தொகையின் விகிதத்துக்கு மிகவதிகமாக சர்வகலாசாலைகளில் அநுமதியைப்பெற வாய்ப்பளிப்பதாய் இருந்தது. இதனால், அரசாங்கமானது சாதாரணமாகவே கண்டியர்களுக்கும் மலைநாட்டுச் சிங்களவர்களுக்கும் பிரத்தியேகமாக உதவிபுரிய முயன்று வருகிறது. இதன்விளைவானது கொழும்புச் சிங்களவர்களும் வசதிபெற்ற ஏனைய பகுதியினரும் இத்தரப்படுத்தல முறையை எதிர்க்கும் நிலையை உருவாக்கியுள்ளது. இதனால், இக் கொள்கையானது மீண்டும் தற்போது மறுபரிசீலிக்கப் படுகிறது.

இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையில் பத்துவீதம் சனத்தொகையினரான இலங்கைத் தமிழர்கள் முப்பத்தோரு வீதமான சர்வகலாசாலை இடங்களுக்குரிய அநுமதியைப் பெற்றிருந்தார்கள். அவ்வேளையில் ஏழுவீதம் சனத்தொகையினரே அங்கில அறிவுடையோராயிருந்தும் இரண்டாந்தர, உயர்கல்வி வகுப்புக்கள் அங்கில மொழியிலேயே இடம்பெற்றன. ஆயினும் சுதந்திரம் பெற்ற அரசானது முக்கிய விடயமாக கல்விபயிலும் மொழிக்குரிய இடத்தை சுயமொழிகளுக்குத் தந்தது. 1961ம் ஆண்டு அரசாங்க உதவி பெற்றுவந்த பாடசாலைகளை தேசிய மயமாக்கிய நடவடிக்கையானது தமிழர்களைவிட கிறிஸ்தவ மதபீடங்களின் முகாமைக்கு உட்பட்டிருந்த கல்விக் கூடங்களுக்கெதிராகவே அமைந்தன. 1970ம் ஆண்டளவில் சர்வகலாசாலைக்கு அநுமதிக்கப்பட்ட தமிழர்களின் தொகை 16 வீதத்துக்குக்கீழ் வீழ்ச்சியடைந்தது. அவ்வாண்டு சர்வகலாசாலைப் பொறியியல் துறைக்கு அநுமதிக்கப் படும் 160 மாணவர்களில் 100பேர் தமிழர்கள் என்பது வெளிக்கு வந்தபோது இது ஒரு பிரச்சனைக்குரிய விடயம் ஆகியது. பொருளாதாரப் பிரச்சனைகள் அதிகரித்த இக்காலப் பகுதியில் விண்ணப்ப தாரரின் தொகை ஆண்டுக்காண்டு அதிகரித்தபோதும் பொறியியலாளர்களுக்குரிய புதிய வேலை வாய்ப்புக்கள் மாற்றம் அடையாது நிலையாக இருந்ததனால், இவ் வேளையில் வெளிவந்த இவ்வறிக்கை மிகவும் தாக்கமான உணர்வுகளை உருவாக்கியது. 1971ம் ஆண்டு சர்வகலாசாலை வளாகங்களில் உருவாகியிருந்த இனக் கலவரப் பீதியால் தெரியப் பட்டவர்களின் பட்டியல் மாற்றப் பட்டதெனினும், புதிய தெரிவுமுறை இரகசியமாக வைக்கப்பட்டது. எனினும் தமிழர்களிடம் வலுவடைந்த எதிர்ப்புக் குரலானது ஏற்றுக் கொள்ளக்கூடிய முறைகளை நடைமுறைப்படுத்தும்படி அதிகாரிகளைக் கட்டாயப்படுத்தியது. அதனாலேயே மொழிவழித் தரப்படுத்தலும், பாடங்களின் மீதான தரப்படுத்தல் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1975ம் ஆண்டு டாக். சி. ஆர். டி. சில்வா அவர்களினால் இலங்கைச் சர்வகலாசாலையில் பிரத்தியேகமாகக் கைக்கொள்ளப்பட்ட ஆய்வொன்றால் 1973 4 ம் 1970 1 ம் ஆண்டுகளும் ஒப்பிடப்பட்டன. அதன்படி தரப்படுத்துதல் முறையால் எந்தப் பின்தங்கிய பாடசாலைகளோ அன்றேல் கிராமப்புறப் பாடசாலைகள் எதுவுமோ விசேட பயன் அடையவில்லை என்று கூறப்பட்டது. வட மாகாணத்திலிருந்து விஞ்ஞானப் பீடத்துக்குத் தெரியப்பட்டவர்களின் தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சியைத்தவிர மாகாணங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் எந்தமாற்றமும் குறிப்பாக ஏற்படுத்தப்படவில்லை. இனரீதியாகப் பாகுபடுத்திப் பார்த்தால் மட்டுமே, இதன் உண்மையான விளைவுகள் புலனாகும். தமிழ்மொழியில் கல்விபெற்று பொறியியல் துறைக்குள் புகுந்த தமிழ் மாணவர்களின் தொகை 70 1 ம் ஆண்டு 40.8 வீதமாக இருந்து 73 4 ல் 24.4 வீதமாக வீழ்ச்சியடைந்தது.

1974ம் ஆண்டில் கல்வி அமைச்சானது விண்ணப்பதாரர் யாவரையும் உள்ளடக்க முடியாத இடங்களில் மாவட்டங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த தொகையில் பின்தங்கிய கிராமப்புறங்களுக்கு வாய்ப்பளிக்கும்வண்ணம் தரப்படுத்தலில் இணைப்பு விதியொன்றைக் கடைப்பிடித்தது. இது போதிய கல்விவாய்ப்புப் பெறமுடியாத பிள்ளைகளுக்காகவே கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் இம்முறையைக் கூர்ந்து அவதானித்த டாக். சில்வா அவர்கள் கவனமான தெரிவு என்ற இடத்தில் இவ் விவாதம் பலவீனமானதாக வளர்ச்சியடைந்த பகுதிகளில் வாழும் வாய்ப்பு குறைந்தவர்களின் வயிற்றிலடித்து வளர்ச்சிகுன்றிய பகுதிகளில் வாழும் வசதி நிறைந்தவர்களுக்கு உதவுவதாயிருக்கிறது என்பதைக் கண்டார். இனரீதியாக தமிழர்கள் தலைகளில் பேரிடி விழுந்துள்ளது என்பதில் சிறிது சந்தேகம் இருப்பதாக அவர் தொகுத்துரைத்தார். தமிழர்களுக்குக் கிடைத்துவந்த பொறியியல் துறை அநுமதி வாய்ப்புக்கள் 1973ம் ஆண்டு 24.4 வீதமாக இருந்து 1974ம் ஆண்டு 16.3 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இம் மாவட்ட வீதமான முறையில் மாற்றமெதுவும் விளைவிக்கப்படாதிருந்தால் 1975ம் ஆண்டு இது 13.2 வீதமாக வீழ்ச்சியடையும். இதேவிதமான முறையால் மருத்துவத் துறையிலும் 1973ம் ஆண்டு 36.9 வீதமாக இருந்த விகிதாசாரம் 1974ம் ஆண்டு 25.9 வீதமாகவும் 1975 ம் ஆண்டு 20 வீதமாகவும் ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதேபோல் பல்மருத்துவத் துறையிலும், விவசாயத் துறையிலும் இழந்த இடங்களின் விகிதமானது இதைவிட அதிகமானது. இலங்கைத் தமிழர்களால் இழக்கப்பட்டது இவைகளே. ஆயினும் நாட்டில் கல்விவசதி மிகக்குறைந்த மக்களாகிய மலையகத் தமிழர்களும் இம்முறையால் பாதிக்கப் பட்டுள்ளார்கள். ஆனால் ஆதாயம் பெற்றவர்களோ கண்டி சிங்களவர்கள். பல கண்டியர்களின் மாவட்டங்களில் வதியும் மிகவதிகமான இந்தியத் தமிழர்களிடம் இரண்டாந்தரக் கல்வி பெறுபவர்கள் மிகச் சிறிய பகுதியாதலால், சர்வகலாசாலைகளில் நுழையும் அவர்கள் தொகை மிகக் குறைவாக உள்ளது. இவ் எஞ்சிய இடங்களும் கண்டிச் சிங்களவர்களுக்கே கிடைக்கின்றன.

சர்வதேச யூரி மாமன்றத்தின் குழுவிற்கு இலங்கைத் தேசிய—தமிழர்களின் உள்விவகார மன்றத்தினரால், சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் சர்வகலாசாலைக்கு தெரிவு செய்யப்படும் உயர்தர மாணவர்கள் பெற வேண்டிய சராசரிப் புள்ளிகளின் தொகை இதுவென அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்:

| | சிங்களவர்கள் | தமிழர்கள் |
|---|---|---|
| மருத்துவம் | 229 | 250 |
| பௌதிகம் | 183 | 204 |
| உயிரியல் விஞ்ஞானம் | 175 | 184 |
| பொறியியல் | 227 | 250 |
| கால்நடைமருத்துவம் | 181 | 206 |
| கட்டிடக்கலை | 180 | 194 |

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்......)

வளரும் ஈழ விடுதலை முன்னணி எனும் தொடர் இடமின்மையால் இடம்பெறவில்லை. ஆனாலும், வளரும் ஈழ விடுதலை முன்னணி திட்டமிட்ட தனது திடமான கொள்கைகளுக்கு அத்திவாரமிடும் பிரச்சாரப் பணியால் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் வளர்ந்தவண்ணம் இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# அழன்றெழு தமிழா!

1. ஆர்ப்பரிப்பு! அமர்க்களம்! அலைக்கழிப்பு! அரசப்பார்வை!
"ஆ! ஆ! இது ஏன்?" என்றால்,
"போர்ப்பரணி! புதுமுழக்கு! பொங்கருவி! புதுவெள்ளம்!
பார்இதனை! என் பாரே!
ஓர் இதழும் இதற்கென்று ஒழுங்காக நடத்திடுவோர்.
ஒலிஇசைப் பார் முரசாக!
பார்த்தாலும் பார்த்தேன்நான்! தமிழ்ப்பேரால் தான்வளரும்
பழிகாரர் இவர் போலே!

2. எழுத்தெல்லாம் தமிழர்க்கு! எருஆவேன் தமிழுக்கு!
எடுப்பெல்லாம் இதுபோல் முழக்கம்!
"கழுத்தேதான் கழன்றாலும் கனித்தமிழை மறவேன்!"
கழறுவார்! வீரவுரை எழுத்தால்!
அழுத்துவதோ தமிழ்மக்கள் அரும்பொருளை! பெருமையினை
அடுப்பதுவோ இந்நிலையும் இனிமேலே!
புழுத்தவுரை வரைகின்ற பொய்த்தமிழர் இவர்! அதனால்
பொசுக்குகவே அவர்இதழை! பழிதீரும்!

3. ஈழத்து விடுதலைக்கு ஈட்டியென முன்நிற்பார்!
ஈரமற்ற பண்டாவின் வால்பிடிப்பார்!
வேழத்து இனமாம்எம் வண்டமிழர் திருநாட்டை
விடுவிக்க உதவுவதாய் உறுமிடுவோர்!
ஆழத்து ஆரியர்க்கே அடிவருடிப் பாய்இடுவோர்!
அருந்தமிழ் இனப்பகையாய் வாழ்ந்திடுவோர்!
ஞாலத்துப் பழங்கதைகள் நடுங்காத சமயவளம்
நாவூறிச் சொல்லிடுவோர்! நம்பொணுதே!

4. எதனைத்தாம் செய்தாலும் என்னதேறும்? கணக்கிடுவோர்!
எழுத்தில் இனங்கெடுக்க முனைவார்!
எதனைத்தாம் அச்சிடினும் எழிற்றமிழைக் குறைத்திடுவோர்.
எண்ணத்தில் பணந்தவிர கவலார்!
எதனைத்தாம் உணர்ந்தாலும் எந்தமிழர் நாட்டுக்கே
எரிகொள்ளி போல்வார்! உதவார்!
எதனைத்தாம் உரைத்தாலும் எதனைப்பிறர் வாய்கேட்டாலும்
எந்நாளும் கயமையில் உழல்வார்!

5. அழன்றெழு தமிழா நீ! அருந்தமிழை மீட்பதற்கு!
அதற்கென்றே வாள் எடுப்பாய்!
கழன்றிடும் பழியெல்லாம்! பகையாளர் கொட்டமெலாம்!
இதற்கென்றே வழி படைப்பாய்!
உழன்றுவரும் தமிழ்இனத்தை உருப்படாது செய்துவரும்
இவர்க்கென்றே போர் தொடுப்பாய்!
சுழன்றுவரும் இனக்கேடர் சுற்றிவரும் ஆளவந்தார்
சுமையென்றெ பழி துடைப்பாய்!

6. பொருள்தேடும் புல்லரையும் பொலிவாங்கும் கள்ளரையும்
போய்க் கொல்வாய்! எழுவாய்!
அருள்கெடுக்கும் இந்திராக்கள் அலைந்தலுக்கும் பண்டாக்கள்
அலறிட வெல்வாய்! செல்வாய்!
இருள்மடுக்கும் இனமேந்தி இருகரையில் தமிழ்ஆள
இதுநேரம் நில்லாய்! வெல்வாய்!
மருள்தீர்த்து மாத்தமிழை மறித்தும் நீ அரியணைமேல்
மயங்காது வைப்பாய்! தமிழ்ச்சேயே!

## ழத் தமிழினமே!

(5ம் பக்கத் தொடர்ச்சி)

....அப்படியானால் கூறுகிறேன் கேள்: மனிதனோடு கலக்கமுடியாதபடி வாழ்
கையை அமைத்துக்கொண்ட கள்ளக்கடத்தல் காரர்களும், வட்டிக்கடை முத
ாளிகளும், கலப்படப் பேர்வழிகளும், கள்ளச்சந்தை ஆசாமிகளும்தான் இவர்கள்
மையை ஏப்பம்விட்ட இவர்கள்தான் தாம்செய்த தீமைகளால் குத்திக்கொண்
நக்கும் மனச்சாட்சியைத் திருப்திப்படுத்துவதற்காகக் கோவில்களும் மடங்க
ம் கட்டுவது! ஈழத் தமிழினமே! கோவிலை நீ உண்மையாக வேண்டுபவனுயின்
பர்ச்சிதரும் சமதர்ம ஆட்சி எமது ஈழநாட்டில் மலர்ந்து, மக்களிடையில் பிர
சனைகள் ஒழிந்து விடுதலை கிடைக்கப் பாடுபடு! அப்போது நாடெல்லாம்
காவிலாகும்! மனிதரெல்லாம் தெய்வமாவர்! உன் பாவங்களும் தீர்ந்துவிடும்! புண்ணியமும் சேர்ந்துவிடும்! பிறர், கண்
ல் காண்பதற்கு மண்ணெல்லாம் தேடியலையும் மாண்புமிகு தெய்வங்களும் உன் பார்வையிலே அகப்பட்டுவிடும்!

(— உன்னோடு ஈழத்தில் பிறந்தவன்.)

## தமிழ் பேசும் மக்கள்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

........ நாம் சரியான பாதையில் எப்படி இயங்கவேண்டும் என்பது ஓரளவு சாமானிய மனிதர்களின் மட்டத்திலும் விளக்கமடைந்துள்ளது. ஆனதால் சீனாவைப் போல், அன்றேல் ஏனைய சுதந்திரப் போராட்டம் நடத்திய நாடுகளைப் போல் அதிககாலம் தேவையல்ல ஒரு போராடும் சக்தியுள்ள இயக்கத்தைக் கட்டிவளர்ப்பதற்கு. சில உண்மைகளை நாம் உணரவேண்டும். ஒன்று, அரசியல் சம்பந்தப்படாத வாழ்வின் எந்தப் பகுதியும் கிடையாது. மனிதர்கள் அரசியல் பிராணிகள் என்பதும், தற்போதைய மனிதவாழ்வெல்லாம் அரசியல் முடிவுகளால் தீர்க்கப்படுகின்றதென்பதும் யாரும் மறுக்கமுடியாது. ஆதலால், ஈழ விடுதலை முன்னணி தமிழர்களுக்கு சோசலிசநாடு ஒன்றை ஈழத்தில் அமைக்கும் நீங்காத பணிக்கு உங்களையும் ஈடுபடுத்துவதற்கு இயக்கத்தின் அங்கத்தினராகச் சேர்ந்து உழைக்கவேண்டிய பொறுப்பை உங்களுக்கு உணர்த்துகிறது. சுதந்திரம்—சமத்துவம்—சகோதரத்துவம் என்பது ஒரே குடும்ப உணர்வுள்ள இயக்கமொன்றால் அல்லாது நிலைநாட்ட முடியாது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது. அத்தோடு, துரித வளர்ச்சியுடன் ஈழத்தின் பொருளாதாரத்தை சோசலிச அமைப்புக்களால் கட்டிவளர்ப்பதற்கும் சமூக புரைநோய்களாம் ஏற்றத்தாழ்வுள்ள மனப்பான்மைகளை அழிப்பதற்கும் இறுக்கமும் இலட்சியப் பிடிப்பும், கட்டுப்பாடும் உள்ள இயக்கமொன்றில்லாது வேறு எவ்வழியிலும் கைகூடாது. பல இயக்கங்களுடன் ஒரு அங்கோலாவை நடத்த தமிழ்மக்கள் சக்தியும் போதாது. பகுத்தறிவோடு இப்படியொரு நிலமைக்கு ஊக்கமளிக்கவும் முடியாது.

அதிமுக்கியமாக இவைகள் எதையும் உணர்ந்துபார்க்க முன்வராத தமிழினத்தால் இனியும் வாழமுடியாது. அயல் நாடுகளின் வளர்ச்சி அந்நிய ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் அடக்குமுறை இவைகளை மேற்கொண்டு நாட்டைக் கட்டி எழுப்ப இலட்சியப் பிடிப்பும் உழைக்கும் உறுதியும் தோழமை உணர்வும் நிரம்பிய தமிழர்கள் ஒன்றுசேர்வோம்.

சூடு சொரணையற்ற தமிழ்மக்கள் வாழ்வுப் பிரச்சனைகளை காலந்தாழ்த்தி அன்றேல் தள்ளிப்போட்டு தமிழ் வீர இளைஞர்களைப் பலியிட்டுவரும் கையாலாகாத அரசியல் இயக்கங்களையழித்தொழித்து போர்முனையில் சமதர்மப் புரட்சியில் தமிழர் வாழ்வைப் பாதுகாப்போம். எல்லோருக்கும் அமைதியும், பாதுகாப்பும், சுதந்திரமும், திருப்தியும், செழிப்பும் தருகின்ற உழைப்பின் மேன்மை உணர்ந்த சோசலிச நாட்டை கட்டி வளர்ப்போம்.

ஈழ விடுதலை முன்னணியில் ஒருவராவீர்! அதனை உமதாகக் கொள்வீர்! உழைக்கும், போராடும் கரங்கள் ஒருமித்துப் பலமடைய ஓயாது செயல்படுவீர்!

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கையில் உலக மகாநாடு! தமிழினமே செயற்படு!

இலங்கையில்,இவ்வாண்டு ஆவணி முற்பகுதியில் உலகத்தின் மூன்றுவது கூட்டான 'மண்டலசார்பற்ற அல்லது கூட்டுச்சேரா நடுநிலைமை' நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ளது.75க்கும் அதிகமாக அங்கம்வகிக்கும் நாடுகளில் பெரும்பாலான ஆசிய,ஆபிரிக்க,இலத்தின் அமரிக்க நாடுகளும், சில ஐரோப்பிய நாடுகளும் உள்ளடங்கியுள்ளன. இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடாத்திவைக்க வேண்டுமென்பதில் ஆளும் கட்சியினர் மிகவும் உற்சாகத்துடன், உன்னிப்பாக செயற்படுகின்றனர். ஏழையின் வயிற்றில் அடித்துப்பெற்ற பலகோடி ரூபாய் இம் மாநாட்டுப் பிரதிநிதிகளின் கண்களில் மண்ணைத்தூவி,பொய்யாட்சி ஒன்றுக்குப் புதுமெருகூட்டிக் காட்டுவதற்குச் செலவுசெய்யப் படுகிறது.இலங்கையின் செல்வச் செழிப்பையும்,அரசாங்கத்தின் வெற்றிகளையும் எடுத்து பொய்ப் பிரசாரம் செய்ய,பலவகையாலும் வண்ணமிட்டு அலங்கரிப்புக்கள்,ஆடல்பாடல்கள்,அணிவகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன! ஏழையின் வயிறுகொதிக்க எதேச்சாதிகாரம் செய்யும் தந்திரவித்தைகள் இவை!

தன்நாட்டு மக்களிடம் நடுநிலைமை காட்ட விரும்பாது,'இராணுவ அடக்கு முறையால் இனவொழிப்பு நடத்தும் நடுநிலைமை நாடென்று' தன்னைத்தானே கூறும் அரைகுறை அரசியல் கும்பலின் சதிராட்டம் இதுவெனலாம்! ஆளும் அதிகார மமதையும்,பதவிவெறியும் கொண்ட இந்த ஆட்சியாளர்களின் முகமூடிகள்,உண்மைகளைத் தாங்கி துணிவுடன் கிழித்தெறியப்படாவிட்டால் இவ் அடக்குமுறை அதிகாரத்துக்கு இம் மாநாட்டால் வலு கிடைத்துவிடும்.

அம்மையாரின் அந்திமகால ஆட்சிப் பேராவல்களில்,இம் மாநாட்டிற்குத் தலைமைதாங்க வேண்டுமென்பதும் ஒன்றென நம்பிக்கையான தகவல்கள் ஈழ விடுதலைக்குக் கிடைத்துள்ளது.அம்மையாரின் தணியாத ஆசை மட்டுமல்ல,அடுத்த தடவை தேர்தற் களத்தில் வெற்றிவாகை சூடுவதற்கு அம்மையாரால் போடப்படும் பலமான அத்திவாரமும் இது என்பது அம்மையிடம் சரணடைந்துள்ள மண்டுகங்களுக்கு விளங்காமல் இருக்கலாம்,அரசியல் புரிந்த சாதாரண மகனுக்கு இது புரியாத புதிரல்ல!

நாட்டு மக்களைப் பட்டினியிட்டு,நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்து,தமிழினத்தின் உரிமைகளுக்கு புதிய அரசியல் திட்டத்தால் புதைகுழி தோண்டி,புதியபுதிய குடியேற்றத் திட்டங்களால் தமிழர்களின் நிலங்களைச் சூறையாடி வரும் அம்மையார், பரத்தையாடி பாசாங்குபண்ணி தனது பாதகங்களை மறைத்துவிடலாம் என்றும் மூடமான தனது அரசியற் காலங்களுக்கு மினுக்கிடலாம் என்றும் துடியாய்த் துடிக்கிறார் என்பது உண்மைதெரிந்த உலகத்திற்கு விளங்குகிறது!அம்மையாரை இன்னும் ஆறு வருடம் ஆட்சிப்பீடத்துக்கு அனுப்பி,அவரின் குடும்ப ஆட்சியெனும் காட்டுக் கூத்துக்கு வக்காலத்து வாங்கவேண்டும் என்பது தமிழர்களின் ஆசையல்ல.அம்மையின் அரசு வந்தாலென்ன,சிங்கள ஐயாக்கள் ஆட்சிமன்றத்தில் கூடாரமடித்தால் என்ன,தமிழர்களுக்கு இனி கவலையில்லை!

தமிழர்கள் இவ்வேளை சிந்திப்பதே இதுதான்:'இம் மாநாட்டிற்கு வருகின்ற பிரதிநிதிகளுக்கு எப்படி நமது நாடுகோணும் ஆசையையும்,தேவையையும்,நியாயத்தையும்,உரிமையையும் தெரிவிப்போம்' என்பதே.ஐக்கிய நாடுகளின் மன்றப் பிரதிநிதி இலங்கை வந்தபோது அநுராதபுரம்வரை மட்டுமே கூட்டிச்சென்று தமிழர் பகுதிகளை,வாழுகின்ற சிறப்பை தெரிந்து கொள்ள முடியாதபடி மூடிமறைத்த அம்மையாரின் ஆட்சி இம் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளித்து தமிழர் நிலம்,அவர்கள் கலை—கலாச்சாரம்—பண்பாடு,அவர்கள் விருந்தோம்பும் பண்பு,ஊக்கம்,உழைப்பு,கல்வியார்வம் இவைகளை எடுத்துக்காட்ட முன்வருவார்கள் என்பது தமிழர்களின் வெறும் பகற்கனவாகவே இருக்கும்.சில சமயம்'மலையகத்திற்கு அழைத்துச் சென்று தரித்திரராய் தாழ்வாரங்களில் தூங்கிமடியும் ஏழைத் தமிழ் குலத்தை நாடற்ற இந்தியர்கள்' என்று காட்டிவரலாம்!இன்னும் அவர்களுக்கு நாட்டில் வாழ்வதற்கு சிங்களவினம் தஞ்சம் அளித்துள்ளதாக பெருமை தேடிக்கொள்ளலாம்!

ஆனால் அந்நியரான சிங்கள ஆட்சிமன்றம் எதையெதை மறைத்தாலும், இராணுவ அடக்குமுறையால் எந்த உண்மைகள் வெளிக்கு வராதபடி தடுத்தாலும் உலகமடங்கிலும் வாழ்கின்ற தமிழர்கள் தம்முடைய நெருக்கடியும் அடக்குமுறையும் நிறைந்த நிலைமைகளை எடுத்துக்காட்ட ஒருபோதும் காலதாமதம் செய்யக்கூடாது.எந்தெந்த வழிகளால் இதை வெற்றிகரமாகச் செய்யலாமோ,அதைச் செய்யாது,எந்தத் தன்மானமுள்ள தமிழ்மகனும் நிம்மதியுடன் தூங்கக் கூடாது!ஊர்வலங்களை நடாத்தி,துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு,தந்திகள் மூலமாக பிரதிநிதிகளுக்கு நேரடிச் செய்திகளைக் கொடுத்து,அடக்குமுறைப் புள்ளிவிபரங்களைத் தொகுத்தனுப்பி,மலையகத்து மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட மாபாதகத்தை எடுத்துக்காட்டி,நாடுகடத்தப்படும் அநியாயத்தை எடுத்து விளம்பி,குடியேற்றத் திட்டங்களின் அடிப்படையை எடுத்துவிளக்கி எமது நிலையைத் தெளியவைக்க வேண்டும்!அதிகார வர்க்கமொன்று பதவியைப் பிடித்துக் கொள்ளுவதற்காக ஆடுகின்ற தெருக்கூத்துக்களும்,அவர்களைப் பார்த்து கைதட்டி மகிழ்கின்ற சிங்கள மக்கள் கூட்டத்தின் புறக்கணிப்பு மனநிலையையும் எடுத்து விளக்கவேண்டும்!

இதற்குரிய நடவடிக்கைகளை தமிழர்கள் தற்போதிருந்தே திட்டமிட வேண்டும்!இயக்கங்களின் இடையறு உழைப்பும்,பொதுமக்களின் ஆதரவும்,மனங்கோணு நிதியுதவியும்,முக்கியமான ஆலோசனைகளுமே அம்மையார் நடத்தும் இப் பேயாட்சியின் அடக்குமுறைகளுக்குரிய தகுதியான எதிர் விளைவுகளைக் கொடுக்கும்.

ஆதலால்,தூங்காதே தமிழா!துடித்தெழு!புறப்படு!செயல்படு!புல்லர்களின் நாசகாரப் போர்வைகளைக் கிழித்தெறி!புதுவுலகு காணப்போகும் உன் தோள்களுக்கு வலிமையை அளித்திடு!தமிழ்மண்ணைச் சிங்கள நாடு ஆளும் அடக்குத்தனத்தை அழித்தொழித்து விடுதலை காண்கின்றவரை உறங்காத உன் ஊன்—உதிரம்—உயிர்—உறுதி யாவையும் தமிழனை,தமிழ்மண்ணைத் தமிழனே ஆளவேண்டும் என்கின்ற உன் உயரிய பேராவலுக்குச் சமர்ப்பணம் செய்!

(குறிப்பு:— இம் மாநாட்டைப் பற்றிய தகவல்களையும்,ஆலோசனைகளையும் இயக்க அங்கத்தவர்களிடமிருந்து 'ஈழ விடுதலை முன்னணி' எதிர்பார்க்கிறது.ஆதலால்,முன்வந்து இயக்கத்தின் கரங்களைப் பலமடையச் செய்யுங்கள்.)

---

இவ் 'ஈழ விடுதலை' இதழ் 35, PRIOLO ROAD, LONDON, S. E. 7ல் இருந்து ஈழ விடுதலை முன்னணியினருக்காக, ஈழ விடுதலைப் பிரசுரத்தால் வெளியிடப்படுகிறது.

27/4/76.

நண்பருக்கு,

உங்கள் மேலதிகமான சந்தாப்பணம் இவ் இதழுடன் முடிவடைகிறது. தொடர்ந்து அடுத்த இதழ்களுக்குரிய பணத்தைத் தயவு செய்து அனுப்பவும். பிரத்தியேகமாக இயக்க வளர்ச்சிக்காக உதவ விரும்பினால் தயவு செய்து கைகொடுக்கவும்.

ஈழ விடுதலை முன்னணி

படிப்பகம்